மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, போதுமான பணம் ஒதுக்கப்பட்டு, வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. தனிப்பட்ட புகார் ஏதாவது வந்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

இராணிப்பேட்டை முதலிய நகராட்சிகளில் சாக்கடை அமைப்புத் திட்டம்

* 455 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து, கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை, வாலாஜாபேட்டை போன்ற நகராட்சிகளுக்கும், மேல் விஷாரம், வந்தவாசி, செய்யாறு போன்ற பேரூராட்சிகளுக்கும் சாக்கடை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அமுல் செய்யப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, ராணிப்பேட்டை வாலாஜாபேட்டை போன்ற நகராட்சிகளுக்கும், வந்தவாசி, செய்யாறு, மேல்விஷாரம் போன்ற பேரூராட்சிகளுக்கும் குடிநீர்த் திட்டம் அமல் செய்யப்பட்டு வருகிறதா? டிரைனேஜ் இல்லாத காரணத்தால் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. ஆகவே, டிரைனேஜ் அமைக்கும் திட்டத்தை அரசு பரிவுடன் கவனிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்பது புதை சாக்கடைத் திட்டம் என்று கருதுகிறேன். பெருநகரங்களுக்கு இத்திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. படிப்படியாக நிறைவேற்றப்படும். தற்போது மேல்விஷாரம், செய்யாறு, வந்தவாசி போன்றவைகளில் புதை சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவதற்கு திட்டம் இப்போது இல்லை.

Crash Programme for Production of Pulses.

* 456 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR :
DR. H. V. HANDE :
THIRU P. S. MANIYAN :
THIRU K. A. WAHAB :

Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any massive programme to grow pulses has been launched in this State during January 1971 : and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1970–71-ம் ஆண்டுக்கு தமிழ்நாட்டில் பயறு வகைகள் உற்பத்தியைக் கூடுதலாக 5.35 லட்சம்